இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 21.05.2026

# சபாநாயகர் முறையாகச் செயல்பட வேண்டும்!

அ.தி.மு.க.வின் உள்கட்சிப் பிரச்சினை குறித்து நாம் ஏதும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் அந்த பிரச்சினையை தனக்குச் சாதகமாக ஆளும் கட்சியான த.வெ.க. பயன்படுத்திக் கொண்டு குளிர்காய்வது சரியானது அல்ல. அதிலும் குறிப்பாக சபாநாயகர் நடந்து கொண்ட முறை சரியானது அல்ல.

தேர்தலின் போது தி.மு.க.வையும் அ.தி.மு.க.வையும் மிகக்கடுமையாக விமர்சித்தார் விஜய். இரண்டு கட்சிகளும் தங்களுக்குள் கூட்டணி வைத்துக் கொண்டு இன்னொரு கட்சியை வரவிடாமல் தடுப்பதாகச் சொன்னார். அ.தி.மு.க.வை ஊழல் சக்தி என்று சொன்னார் விஜய். எனக்கும் தி.மு.க.வுக்கும் தான் போட்டியே என்று சொன்னார்.

பெரும்பான்மையைப் பெறாத விஜய் என்ன செய்தார்? தி.மு.க. கூட்டணியில் சேர்ந்து வெற்றி பெற்ற கூட்டணிக் கட்சிகளை தன்னோடு இணைத்துக் கொண்டார். தி.மு.க. கூட்டணிக் கட்சிகளின் 13 இடங்களைக் காட்டி தான் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை தனக்கு இருப்பதாகச் சொல்லி ஆளுநரிடம் ஆட்சி அமைக்க அனுமதியைப் பெற்றார் விஜய்.

**அடுத்து அவர் செய்தது மிகப்பெரிய கேவலமான காரியம் ஆகும். அ.தி.மு.க.வை தனக்குச் சாதகமாக விஜய் உடைத்தார். அவர்களில் 25 பேர் ஆதரவையும் பெற்றார். அவர்களையும் காட்டித் தான் 144 உறுப்பினர் ஆதரவு தனக்கு இருப்பதாக நிரூபித்தார் முதலமைச்சர் விஜய். இப்படி இரவல் கட்சிகளை வைத்துத்தான் முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்து இருக்கிறார் விஜய்.**

அ.தி.மு.க.வின் அதிகாரப்பூர்வ கொறடா உத்தரவு (Whip Order) என்பது த.வெ.க.ஆட்சிக்கு எதிராக வாக்களிக்க வேண்டும் என்பது ஆகும். அதனை மீறிய 25 உறுப்பினர்களை சட்டப்படி தகுதி நீக்கம் செய்திருக்க வேண்டும் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரன். கொறடா உத்தரவை மீறினால் அது கட்சித் தாவல் ஆகும். அரசமைப்பு சட்டத்தின் 10 ஆவது அட்டவணையின் கீழ் பதவி போய்விடும். தனியாகச் செயல்படுகிறவர்கள் கொறடாவை நியமிக்கவும் முடியாது.

எனவே, அ.தி.மு.க.வின் அதிகாரப்பூர்வ கொறடாவைத் தேர்ந்தெடுத்து அனுப்பியதையே சபாநாயகர் ஏற்காமல் இழுத்தடித்துள்ளார். சபாநாயகரின் முதல் தவறு இது. இதில் இருந்தே சபாநாயகரின் உள்நோக்கம் தெளிவாகி விட்டது. அ.தி.மு.க.வின் அதிகாரப்பூர்வமான கொறடாவை ஏற்றுக் கொண்டு விட்டால், கொறடா உத்தரவையும் ஏற்க வேண்டும், கொறடா உத்தரவை மீறியவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். சாமர்த்தியமாக தன்னை இப்பிரச்சினையில் இருந்து விடுவித்துக் கொள்வதை போல தந்திரமாக நடந்து கொண்டுள்ளார் சபாநாயகர்.

**அ.தி.மு.க. பொதுக்குழுவால் அதிகாரப்பூர்வமாக பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் எடப்பாடி பழனிசாமி. அவர் தரப்பில் கொறடாவாக அறிவிக்கப்பட்டவர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி. அவரைதான் கொறடாவாக சபாநாயகர் ஏற்றுக் கொண்டு இருக்க வேண்டும். அவரை ஏற்காமல் இருப்பது சபாநாயகரின் தவறு ஆகும்.**

அ.தி.மு.க.வைச் சேர்ந்த சிலருக்கு அமைச்சர் பதவி தருவதாகவும், வாரியத் தலைவர் பதவி தருவதாகவும் த.வெ.க. ஆசை வார்த்தைகளைக் கூறி இருக்கிறது என்று பகிரங்கமாக சபையில் குற்றம் சாட்டினார் எடப்பாடி பழனிசாமி. இந்த நிலையில் அதி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியைப் பேச அழைத்தது சபாநாயகரின் தவறான செயல் ஆகும். கொறடா உத்தரவை கடைப் பிடிப்பதும், கடைப்பிடிக்காமல் போவதும் அவர்களது பிரச்சினை. இதில் சபாநாயகருக்கு என்ன ஆர்வம் வந்தது?

அ.தி.மு.க.வைச் சேர்ந்த 25 பேர் இல்லாவிட்டாலும் த.வெ.க. ஆட்சிக்கு 119 உறுப்பினர் ஆதரவு இருக்கிறது. ஆட்சி எப்படியானாலும் தப்பிப் பிழைத்து விடும். பிறகு ஏன் அ.தி.மு.க.வை பிளவுபடுத்தி, கூடுதல் ஆதாயம் தேட த.வெ.க. நினைக்க வேண்டும்?

எஸ்.பி.வேலுமணி, சி.வி.சண்முகம் என்ற குழுவால் கொறடா என்பதாக அதிகாரப்பூர்வமற்ற முறையில் கொறடாவாக சி.விஜயபாஸ்கர் தேர்ந்தெடுக்கப்பட்டு இருப்பதாக சபாநாயகருக்கு ஒரு கடிதம் தரப்பட்டுள்ளது. அங்கீகாரம் இல்லாத சிலரால் அப்படி ஒருவர் கொறடாவாக தேர்ந்தெடுக்க முடியுமா? அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் என்ற பொறுப்பில் இருக்கிறாரா வேலுமணி?

அங்கீகாரம் இல்லாத சிலரால் ஒருவர் கொறடாவாக அறிவிக்கப்பட்டால், அதனை சபாநாயகரால் ஏற்றுக் கொள்ள முடியுமா? விதிமுறைகளில் மிகமிகச் சாதாரணமானது இது. அங்கீகரிக்க முடியாது. ஒரு கட்சியின் அதிகாரப்பூர்வ மானவரால்தான் கொறடாவைத் தேர்ந்தெடுக்க முடியும். இப்படி இருக்கும் போது சபாநாயகர் தவறாகச் செயல்படுவது சரியானது அல்ல.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் முடிவுப்படி அக்ரி கிருஷ்ணமூர்த்தியை தேர்ந்தெடுத்துள்ளோம் என்று சபாநாயகரிடம் ஒரு மனுதரப்பட்டுள்ளது. ஒரு குழுவினர் டாக்டர் விஜயபாஸ்கரை கொறடாவாக தேர்ந்தெடுத்துள்ள தாக சபாநாயகரிடம் மனு தந்துள்ளார்கள். "இந்த இரண்டு மனுக்களையும் பரிசீலித்து வருகிறேன். விரைவில் ஆய்வு செய்யப்பட்டு உரிய முடிவுகள் எடுக்கப்படும்" என்று சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரன் சொல்லி இருக்கிறார். 'விரைவில்' என்றால் எப்போது? இந்த பிரச்சினையே வாக்களிப்பதற்கு முன் தீர்த்திருக்க வேண்டியது ஆகும். 'அ.தி.மு.க.வில் இரண்டு கொறடா மனுக்கள் வந்துள்ளதால், நம்பிக்கை அளிக்கும் தீர்மானத்தை ஒத்தி வைக்க வேண்டியதாக இருக்கிறது' என்றல்லவா சரியான சபாநாயகராக இருந்தால் செய்திருப்பார்.

ஒரு சிலரால் கொறடாவைத் தேர்ந்தெடுக்க முடியாது என்பது வேலுமணி குழுவுக்குத் தெரியும். அதனால்தான், 'எங்களுக்கும் இப்போதும் எடப்பாடி பழனிசாமிதான் பொதுச்செயலாளர்' என்று அவர்கள் சொல்லி வருகிறார்கள்.

**அசிங்கமான காமெடி என்னவென்றால், த.வெ.க. யாருடைய ஆதரவை பெற்றுள்ளது?**

**'நாங்கள் தி.மு.க. கூட்டணியில் தொடர்கிறோம்' என்ற கட்சிகளின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைத்துள்ளது.**

**'எங்களுக்கும் எடப்பாடி பழனிசாமி தான் பொதுச்செயலாளர்' என்று சொல்லும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் சிலரின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைத்துள்ளது.**

**ஆனால் பெயர் த.வெ.க. ஆட்சி. பார்ப்போம் எவ்வளவு காலம் போகிறது என்று!**




நெல்லை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் வள்ளியூரில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் ஞான திரவியம், சித்திக், நம்பி உள்பட பலர் உள்ளனர்.

### மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமை!

# நெல்லை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

நெல்லை, மே 21–

கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், வள்ளியூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் 17.05.2026 அன்று நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று கழக வளர்ச்சி பணிகள் குறித்தும், பல்வேறு ஆலோசனைகளை வழங்கியும் சிறப்புரையாற்றினார்.

நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சா.ஞான திரவியம், எஸ்.ஏ.கே.சித்திக், மாவட்டப் பொறுப்புக் குழு உறுப்பினர்கள் ஜார்ஜ் கோசல், நம்பி, அல்போன்ஸ், ஆதிபாண்டி, ஹரி கிருஷ்ணன், அனுராதா, சந்திர கலா, பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன், கனக ராஜ், சாந்தி சுபாஷ்,

ஒன்றியச் செயலாளர்கள் போர்வெல் கணேசன், வேலங்குளம் கண்ணன், ஜோசப் பெல் சி,பி.சி.ராஜன், சுபாஷ் தங்க பாண்டி, செல்வ கருணாநிதி, சுடலைக்கண்ணு, எரிக் ஜூடு, நகரச் செயலாளர் மணி சூரியன், பேரூர்ச் செயலாளர்கள் தமிழ்வாணன், அயூப்கான், கசமுத்து, வானுமாமலை, முருகையா பாண்டியன், ஜான் கென்னடி, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மல்லிகா அருள், மாடசாமி, பொட்டைகுளம் முருகன், முருகன், அழகுமுத்து, சேகர் உள்பட மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

### முத்துப்பேட்டையில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளரை

# வீடு புகுந்து பாட்டிலால் சரமாரியாக குத்திய கஞ்சா கும்பல்!

### கேள்விக்குறியான சட்டம் ஒழுங்கு!

முத்துப்பேட்டை, மே 21-

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை முகைதீன் பள்ளி வாசல் தெருவைச் சேர்ந்தவர் பசீர் அகமது மகன் ஹாஜா முகைதீன் (38), இவர் ஒரு தனியார் தொலைக் காட்சியின் (நியூஸ் ஜெ) செய்தியாளராக இருந்து வருகிறார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு வழக்கம் போல் செய்தி சேகரிப்பு பணியை முடித்து விட்டு வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டு தூங்கி கொண்டு இருந்தார்.

அப்போது நள்ளிரவு சுமார் 11.45 மணியளவில் ஏற்கனவே கஞ்சா வழக்கில் கைதாகி விடுதலையில் வந்திருந்த சலீம் மகன் அப்துல் பாசித் தலைமையில் மூன்று பேர் கொண்ட ஒரு கும்பல் ஹாஜா முகைதீன் வீட்டுக்குச் சென்று கதவைத் தட்டி உள்ளனர்.

அப்பொழுது அவரது மாமியார் கதவை திறந்தபோது, ஹாஜா மைதீனிடம் பேச வேண்டும் என்று அந்த கும்பல் கூறியுள்ளது.

உடனே கதவைத் திறந்த ஹாஜா முகைதீன் வெளியில் வந்து பேசிக் கொண்டிருக்கும் போது அப்துல் பாசித் இடுப்பில் சொருகி வைத்திருந்த பாட்டிலால் தலையில் அடித்து மேலும் தலை, நெஞ்சு உள்ளிட்ட உடலில் பல பகுதியில் பாட்டிலால் அந்த கஞ்சா கும்பல் குத்தி காயப்படுத்தியதுடன் அவரின் செல்போனையும் பறித்துக் கொண்டு அங்கிருந்து தப்பி உள்ளது.

இதனைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அவரது குடும்பத்தினரும், அப்பகுதி மக்களும் முத்துப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கு முதல் உதவி சிகிச்சைக்கு பின்னர் ஹாஜா முகைதீன் தற்பொழுது தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் ஆபத்தான நிலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் நள்ளிரவு கஞ்சா கும்பல் ஒரு பத்திரிக்கையாளரை வீடு புகுந்து தாக்கிய சம்பவம் மாவட்டம் முழுவதும் பெரும் பரபரப்பையும் அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

முதலமைச்சர் ஜோசப் விஜய் ஆட்சிக்கு வந்து சில தினங்களிலேயே பெருகும் ரவுடிகளின் அட்டகாசம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியையும், பயத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

---

### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# 2026ஆம் ஆண்டுக்கான மாணவர்கள் சேர்க்கை அறிவிப்பு!

சென்னை, மே 21-

தமிழ்நாடுஅரசுஅங்கீகாரத்துடன், சென்னை, தரமணியில் இயங்கும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் கல்வி உதவித்தொகையுடன்நடத்தப்படும் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பு (Five Years Integrated P.G. M.A. in Tamil ) மற்றும்முதுகலைப்பட்டப் படிப்பு (M.A. Tamil)

(தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழக ஏற்பு) தமிழ்மொழி வளர்ச்சிக்கெனத் தமிழ்நாடு அரசால் தோற்றுவிக்கப் பட்ட உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பல்வேறு கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழகஏற்புடன்,தமிழ்முதுகலைப்பட்டப்படிப்பு( M.A. Tamil ) மற்றும் ஐந்தாண்டுஒருங்கிணைந்த தமிழ் முதுகலைப் பட்டப்படிப்பு ( Five Years Integrated Post Graduate M.A. In Tamil ) மற்றும் தமிழ் முனைவர்பட்டவகுப்பு (Ph.D.) ஆகியன இந்நிறுவனத்தில் ஆண்டுதோறும்தொடர்ந்துநடத்தப் பெற்று வருகின்றது.

அந்த வகையில் தற்போது 2026 - 27ஆம் கல்வியாண்டில்ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பு மற்றும் முதுகலைத் தமிழ் பட்டப் படிப்பிற்கானமாணவர்கள் சேர்க்கை நடைபெறவுள்ளன.

மேற்கண்ட படிப்புகளில்பயிலவிரும்புவோர் சேர்க்கைத் தொடர்பானவிதிமுறைகள்/தகவல்கள் மற்றும் விண்ணப்பத்தை www.ulakaththamizh.in என்ற இணையமுகவரியில்பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வகுப்புகளில் சேர்க்கைப்பெறும் மாணவர்களுள் தேர்வின் அடிப்படையில் 15 மாணவர்களுக்கு திங்கள்தோறும் தமிழ்நாடு அரசால் ரூ.2000/ வீதம் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

இருபாலருக்கான தனித்தனி கட்டணமில்லா தங்கும் விடுதி வசதி மற்றும் உணவு வசதி உள்ளது.

நிறைவு செய்யப்பட்டவிண்ணப்பங்கள், இறுதியாகப் படித்த கல்விச்சான்று மற்றும் மாற்றுச்சான்றிதழ் (சான்றொப்பமிடப்பட்டது) நகலுடன் இணைத்து நேரில் (அ) அஞ்சலில் இயக்குநர் (கூ.பொ.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத்தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை600113 (தொலைபேசி 044 2254 2992) என்ற முகவரியில் ஒருங்கிணைந்த தமிழ் முதுகலைபட்டப்படிப்பிற்கு 15.06.2026 திங்கள் கிழமைக்குள்ளும், முதுகலை தமிழ் பட்டப் படிப்பிற்கு 30.06.2026 - செவ்வாய்க்கிழமைக்குள் சமர்ப்பித்திட வேண்டும்.

மேலும் தகவல் பெற மேற்காணும்முகவரியில் தொடர்புகொள்ளலாம் அல்லதுநிறுவனவலைத்தளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.